

மீண்டும்... மீண்டும்....
நினைவில் சுழல்கிறது-
அந்த அழகு முகம்.
அந்த மழலைச் சிரிப்பு,
அந்தப் பாட்டு.
அன்று-
இரவு சூழ்ந்து விட்டது.
சலசலக்கும் காட்டு மரங்கள்.
சருகுகளின் ஓசை.
சில்வண்டுகளின் ரீங்காரம்
காற்றின் வருடலில்,
கனலும் தீக்கங்குகள்.
குழுமியிருக்கும் விடுதலை இளவல்கள்.
அவர்களிடையே பல்சுவை நிகழ்ச்சி.
இது சீலனின் முறை.
அவனுக்குப் பாட்டு.
இதோ சீலன்!
எப்போதும் போல் கட்டமிட்ட சட்டை
கணுக்காலுக்கு மேல் மேல் மடித்து விட்ட ஜீன்ஸ்.
அவனிடம் கூச்சம்.
சிரித்துச் சமாளிக்கிறான்.
நண்பர்களின் தூண்டுதல்.
பாட்டின் ஆரம்பம்.
ஆரவாரவான வரவேற்பு.
உற்சாகமடைகிறான்.

கைகளை அகல விரித்து கம்பீரமாகப் பாடுகிறான்.

*"அதோ அந்தப் பறவை*
*போல வாழ வேண்டும்.*

*இதோ இந்த அலைகள்*
*போல..."*





தமிழீழத்தின் அடிக்கல் **3**

# ஆனந்த் – உறுதியோடு உயிர்கொடுத்த இளம்புலி



வீரவேங்கை ஆனந்த்

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய இளம் கெரில்லா வீரன் ஆனந்த் என்னும் அருள்நாதன், உலகிற்குப் பிரகடனப் படுத்தப்பட்டான். மீசாலை மண்ணிலே சுற்றி வளைத்துக் கொண்ட சிங்கள இராணுவக் கூலிப்படைகளுடன் சாகும்வரை துப்பாக்கி ஏந்திப் போராடிய வேங்கைதான் அருள்நாதன்.

நெஞ்சில் வழியும் ரத்தத்தோடு, "என்னைச் சுடடா, சுடு" என்று சீலன் பிறப்பித்த கட்டளையை ஏற்றுப், பக்கத்திலே நின்ற மற்றுமொரு கெரில்லா வீரனின் துப்பாக்கிச் சன்னங்கள்

சீலனின் தலையிலே பாய்வதைப் பார்க்கிறான் ஆனந்த். கண்ணி மைக்கும் நேரத்திற்குள் சிங்களக் கூலிப்படைகளின் துப்பாக்கிச் சன்னங்கள் ஆனந்தையும் தரையிலே வீழ்த்துகின்றன.

சீலனோ அந்தக் கெரில்லாப் படைத்தலைவன், அரசபடையால் வலை வீசித் தேடப்படுபவன். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தாக்குதல் சம்பவத்தில், சீலனின் தலைமையிலே அந்தக் கெரில்லாத் தாக்குதல் நடைபெற்றது. என்பதைச் சிங்களக்கூலிப்படைகள் தெரிந்து வைத்திருந்தன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த அங்கத்தவன் - சிங்களக் கூலிகளின் கரங்களில் அந்தக்காளை பிடிபடவே முடியாது.

சீலனுக்கு தன்னை மாய்த்துக்கொள்ளும் மனப்பக்குவம் சித்திப்பதற்கு அநுபவம் துணை புரிந்திருக்க வேண்டும். ஆனால், இயக்கத்தில் சேர்ந்து ஆயுதப் பயிற்சி பெற்று ஏழுமாதங்கள்கூட நிரம்பாத நிலையில், இயக்க ரகசியத்தைக் காத்துக்கொள்வதற்குத் தன்னையும் சுட்டுவிடுமாறு சக வீரனைப் பணித்த ஆனந்தின் இலட்சியத் தூய்மை, நம்மைச் சிலிர்ப்படையச் செய்கிறது.

விடுதலைப்புலிகளின் புரட்சிகர ஆயுதப்பாதையில் நம்பிக்கையோடும் உறுதியோடும் கால்பதித்த அந்த இளைஞன், எத்தனையோ யுத்த களங்களைக்காண ஆசைப்பட்டிருப்பான். ஆனால் அந்தச் சாதனைகளை எல்லாம் செயலில் காட்ட அந்த வீரமகனின் சின்ன ஆயுள் இடம் கொடுக்கவில்லை. பத்தொன்பது வயதிற்குள்ளேயே ஆனந்த் சாவை அணைத்துக் கொள்ள நேர்ந்தது துரதிர்ஷ்டமே.

ஆனந்திற்கு வயதை மீறிய வாட்ட சாட்டமான உடம்பு. அரும்பு மீசை, மேவித்தான் தலையிழுப்பான். அடித் தொண்டையில்தான் கதைப்பான். யாரோடும் கோபிக்க மாட்டான். நண்பர்களோடு விட்டுக் கொடுக்கும் சுபாமுடையவன். எந்த வேலையையும் ஏறத்தாழ்வு பார்க்காமல் செய்பவன். சமையல் செய்வதிலிருந்து, கிணறு வெட்டுவதுவரை அலுப்பில்லாமல் எதையும் செய்ய முன்நிற்பான்.

மெல்லிய நீலநிறத்தில் ஆடைகள் அணிவதில் அவனுக்கு விருப்பம் அதிகம். மயிலிட்டிமண் ஈந்த வீரமைந்தன் ஆனந்த், நீர்கொழும்பில் தன் ஆரம்பக் கல்வியைப் பெற்றான். பின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் உயர்கல்வி கற்றான். க.பொ.த. உயர்தரப் பிரிவில் விஞ்ஞானம் பயின்ற ஆனந்த் அரசியலைப் பின்னாளில் வாழ்க்கையாக வரித்துக்கொண்டான்.

பாடசாலைக் காலங்களில் ஆனந்த் சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தான். பாடசாலை உதைபந்தாட்டக் கோஷ்டியில் சிறந்த கோல் காப்பாளராகப் பிரபல்யம் பெற்றிருக்கிறான். சிறந்த கிரிக்கெட் வீரனுமாவான். கராத்தேயும் கற்றிருந்தான். சகலவிதமான வாகனங்களையும் அநாயாசமாகச் செலுத்தும் திறமை கொண்டவன்.

தனது குறுகிய ஆயுதப் பயிற்சிக் காலத்திலும் ஆயுதங்களின் நுட்பங்களை நிறையத்தெரிந்து வைத்திருந்தான். வெடிகுண்டுகள் தயாரிப்பதிலும் அவனுக்குப் போதுமான ரசாயன அறிவிருந்தது. துப்பாக்கிப் பயிற்சியின் போது மிகக் குறைந்த நேரத்தில் கூடிய இலக்குகளை(Targets) அடிக்கடிக் கூடியவன். சரியாக இலக்குக் குறிவைத்து அடித்துவிட்டான் என்றால், "ஹாய்" என்று கைகளை உயர்த்திக் குலுங்கிச் சிரிக்கும்போது, ஒரு பாடசாலை சிறுவனின் பெருமிதமே வெளிப்படும். (குறி தப்பாது சுடுகின்ற ஒரு கெரில்லா வீரனின் திறமையை, ஜேம்ஸ் பொண்ட் சாகஸங்கள் என்று கொச்சையாக அர்த்தப்படுத்திக்கொண்டு நாம் குழம்பிக்கொள்ள வேண்டியதில்லை) பலம் மிகுந்த அடக்குமுறை இராணுவத்திற்கு எதிராகக் குறைந்த அளவு ஆயுதங்களுடன் தொடுக்கப்படுகின்ற கெரில்லாத் தாக்குதலின்போது, இத்தகைய திறமைவாய்ந்த கெரில்லா வீரர்கள் தனிமுக்கியம் வகிக்கின்றனார்கள்.

நன்றி: விடுலைப்புலிகள் குரல்-4 ஒகஸ்ட் 1984




செல்லக்கிளி, சீலன், ஆனந்த் ஆகியோரின் முதலாம் ஆண்டு நினைவாக விடுதலைப் புலிகளினால் வெளியிடப்பட்ட சுவரொட்டி.